# அனைவருக்கும் வணக்கம்

# அசை

**அசை என்றால் என்ன?**

- எழுத்துக்களுள் ஒன்றினை மற்றொன்றனோடு சேர்த்து (ஒலித்து) இசை கொள்வதே அசை ஆகும்.
- எழுத்துக்களால் அமையும் அசை இரண்டு. அவை

1. நேரசை 2.நிரையசை

# நேரசை

- ஓரெழுத்தால் அமைவது நேரசை எனப்படும்.
- நேரசை நான்கு தன்மையால் அமையும்.
- குற்றெழுத்துத் தனித்து வருதல் - க
- நெட்டெழுத்துத் தனித்து வருதல் - கா
- குற்றெழுத்து ஒற்றுப்பெற்று வருதல் - கல்
- நெட்டெழுத்து ஒற்றுப்பெற்று வருதல் - கால்

# நிரையசை

- ஓர் எழுத்தோடு மற்றோர் எழுத்தை இணைத்து அமைத்துக் கொள்வது நிரையசை எனப்படும்.
- நிரையசை நான்கு தன்மையால் அமையும்.அவை
- குறில் இணைந்து வருதல் - பல
- குறில் நெடில் இணைந்து வருதல் - பலா
- குறில் இணைந்து ஒற்று பெற்றுவருதல் - கலம்
- குறில் நெடில் இணைந்து ஒற்று பெற்றுவருதல் - கலாம்

# சீர்கள்

- நேர், நிரை என்னும் இருவகை அசைகளும் தனித்தோ தொடர்ந்தோ அளவுற அமைவது சீர் எனப்படும்.
- சீர் என்பதற்கு ஓசை என்பதுபொருளாகும்.
- ஒரு சொல்லில் எத்தனை அசை இடம்பெற்றுள்ளதோ அதன் அடிப்படையிலேயே சீர்கள் இடம் பெறுகின்றன.

# சீர்களின் வகை

- ஈரசைச் சீர் - நேர் நேர்
- மூவசைச் சீர் - நேர் நேர் நிரை
- நாலசைச் சீர்

(அல்லது) பொதுச்சீர் - நேர் நேர் நிரை நேர்

- ஓரசைச் சீர் - நேர் (அல்லது) நிரை.

இவை சீர்களின் வகையாகும்.


நன்றி